KALANJIYAM – International Journal of Tamil Studies
ISSN 2456-5148 (Online)
ngmtamil.in

RESEARCH ARTICLE

# தவ்வை: இலக்கியச் சொல்லாடலும் வளமைக் கருத்தாக்கங்களும்

*Thavvai: Literary Expressions and Conceptualization of Fertility*

**சுபத்ரா கு. 1*, முனைவர் சுந்தரமூர்த்தி ம. 2**

1 முனைவர்பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை பெரியார் பல்கலைக்கழகம் சேலம் - 11 8072677960, India
2 பேராசிரியர் தமிழ்த்துறை பெரியார் பல்கலைக்கழகம் சேலம் – 11 9443714173, India
* Corresponding author

How to cite

கு., சு., & ம., மு. சு. (2026). தவ்வை: இலக்கியச் சொல்லாடலும் வளமைக் கருத்தாக்கங்களும். KALANJIYAM – International Journal of Tamil Studies, 10(02), 43–52. https://ngmtamil.in/journal-article/%e0%ae%a4%e0%ae%b5%e0%af%8d%e0%ae%b5%e0%af%88-%e0%ae%87%e0%ae%b2%e0%ae%95%e0%af%8d%e0%ae%95%e0%ae%bf%e0%ae%af%e0

Vol. 10, No. 02 (September 2026), pp. 43–52

Received: 1 Oct 2026 · Accepted: 4 Oct 2026

© 2026 The Author(s). This open-access article is distributed under the terms of the CC BY 4.0 licence (https://creativecommons.org/licenses/by/4.0/).

Downloaded from ngmtamil.in on 5 October 2026

**KALANJIYAM – International Journal of Tamil Studies**
களஞ்சியம் – சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
ISSN 2456-5148 (Online)

Vol. 10, No. 02 (September 2026), pp. 43–52
ngmtamil.in

RESEARCH ARTICLE · OPEN ACCESS

# தவ்வை: இலக்கியச் சொல்லாடலும் வளமைக் கருத்தாக்கங்களும்

*Thavvai: Literary Expressions and Conceptualization of Fertility*

**சுபத்ரா கு.[1,*], முனைவர் சுந்தரமூர்த்தி ம.[2]**

[1] முனைவர்பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை பெரியார் பல்கலைக்கழகம் சேலம் - *11 8072677960, India*
[2] பேராசிரியர் தமிழ்த்துறை பெரியார் பல்கலைக்கழகம் சேலம் – *11 9443714173, India*

* Corresponding author / தொடர்பு ஆசிரியர்: சுபத்ரா கு. — nalinisubathra@gmail.com

| Received / பெறப்பட்டது | Revised / திருத்தப்பட்டது | Accepted / ஏற்கப்பட்டது | Published / வெளியிடப்பட்டது |
|---|---|---|---|
| 1 October 2026 | — | — | 1 October 2026 |

| DOI | Article ID / கட்டுரை எண் |
|---|---|
| — | KALN-2026-00013 |

## ஆய்வுச்சுருக்கம்

தவ்வை என்ற சொல் தமிழில் அன்னையையும் மூத்த சகோதரியையும், இவ்விடத்தில் தமிழர்களின் ஆதித்தெய்வமும் வளமைத்தெய்வமுமாகிய மூத்ததேவியையும் குறிக்கின்றது. தற்காலத்தில் இத்தெய்வ வழிபாடு மறைந்துவரும் நிலையில் மூதேவி என்ற வசைச்சொல்லின் பயன்பாடு மக்களிடையே இருப்பதனைக் காண முடிகின்றது. சங்ககாலத்து இலக்கியங்கள் முதற்கொண்டு தற்கால இலக்கியம் வரை தவ்வையைக் குறித்து நேரடியாகவோ மறைமுகமாகவோ வரும் பல்வேறு பெயர்கள் காணக்கிடைக்கின்றன. அப்பெயர்களின் ஆய்வு இத்தெய்வம் வளமைக்கும் செழிப்புக்கும் உரிய தெய்வமாக இருந்தது என்ற கருத்தினை உணர வழிவகுக்கும். இதன் வழி மூதேவி என்ற சொல், வசைச்சொல் அல்ல வளமைச்சொல் என நிரூபிப்பது இவ்வாய்வின் நோக்கமாக அமைகின்றது.

**Keywords / திறவுச்சொற்கள்:** மூதேவி – வளமை – செழிப்பு – தாய்தெய்வம் - வளமைக்கடவுள் - தமிழர்களின் ஆதித்தெய்வம்

## Abstract

The term 'Thavvai' in Tamil denotes mother and elder sister, and in this context, it refers to the primordial goddess and the goddess of Prosperity or Abundance of the Tamils, known as Moodevi. At present, while the worship of this deity is gradually declining, the use of ‘Moodevi’ as a derogatory term can be observed among the people. From Sangam-period literature through contemporary literature, various names referring to Thavvai, either directly or indirectly, can be found. The study of these names helps establish that this deity was associated with prosperity and abundance. Through this, the objective of this research is to establish that the word 'Moodevi' is not a derogatory term but a term denoting prosperity.

**How to cite / மேற்கோள் காட்டும் முறை:** கு., சு., & ம., மு. சு. (2026). தவ்வை: இலக்கியச் சொல்லாடலும் வளமைக் கருத்தாக்கங்களும். KALANJIYAM – International Journal of Tamil Studies, 10(02), 43–52.

## முன்னுரை

தற்காலத்தில் தவ்வை வழிபாடு முற்றிலும் மறையக் கூடிய சூழல் உள்ள நிலையில் நாட்டுப்புற மக்களின் நினைவில் இத்தெய்வம் இருந்தாலும் 'அமங்கலத்தின் தெய்வம்' என்ற எதிர்நிலைப்பாட்டையும் புழக்கத்தில் மிகக் குறைவான பெயர்ப் பயன்பாட்டையும் கொண்டிருக்கிறது. ஆனால் இலக்கியங்களிலும் நிகண்டுகளிலும் இத்தெய்வம் குறித்த பெயர்ச் சொற்கள் பல காணக்கிடைக்கின்றன. மேலும் கள ஆய்வில் இத்தெய்வம் குறித்தும் இதன் வளமைத் தன்மை குறித்தும் மக்களிடமிருந்து நேரடியான தகவல் ஏதும் கிடைக்காவிட்டாலும் உற்றுநோக்கல் மற்றும் உய்த்துணரல் அடிப்படையில் கிடைக்கும் சில தகவல்கள் இக்கட்டுரைக்கும் தவ்வையின் வளமை பற்றிய கருத்துக்கும் வளம் சேர்க்கின்றன.

**வளமைக் கருத்தாக்கம்**

நாட்டுப்புற மக்கள் வளமை மீது மிகுந்த நம்பிக்கை கொண்டிருந்தனர். வளமை என்பதற்கு செழிப்பு, நன்மை, செல்வம், உதவி, பொருள், மாட்சிமை எனவும் வளமையர் என்பதற்கு வேளாளர், மாட்சிமையுள்ளோர், பணச்செழிப்புள்ளோர் எனவும் பொருள் கூறப்படுகின்றது. வளம் என்பது செழிப்பு என்ற சொல்லாட்சியாலும் சுட்டப்படுகின்றது. செழிப்பு என்பது முதலில் பயிர்களின் செழிப்புத்தன்மையை உணர்த்துகின்றது. பயிரால் விளையும் தானியங்கள் செல்வம் எனப்படுகின்றது. தானியத்தினால் உணவுத்தேவையை நிறைவேற்றித் தன்னிறைவு பெற்றவன் தொடர்ந்து தன்னிறைவுத் தன்மையைப் பெற முயலும் போது வளமை பற்றிய கருத்து வலுப்பெறுகின்றது. மனிதன் உணவு உற்பத்தி செய்யும் தொழில் முறையைக் கைக்கொண்டபின்னும் பயிர் வளத்திற்கும், அழிவிற்கும் பல இயற்கை நிகழ்வுகள் காரணமாய் அமைந்தன. வெள்ளம், வறட்சி, மிகுந்த வெப்பம், தொடர்ந்து ஓரிடத்தில் பயிர் செய்வதால் வளம் குன்றுதல் ஆகிய இடர்பாடான காரணிகள் ஓரினம் நிலையாக ஓரிடத்தில் வேளாண்மை செய்து வாழ்வதற்குத் தடையாக இருந்தன. இதனை அனுபவத்தின் வாயிலாக அறிந்த மனிதன் ஒவ்வொரு இடர்பாடுகளையும் எதிர்க்கும் அல்லது தாங்கும் மாற்று வழிகளைச் சிந்திக்கலானான். இச்சிந்தனைகள் புலம் பெயர்ந்து வாழும் நாடோடி வாழ்க்கையையும் வேட்டைத் தொழிலையும் மறக்கச் செய்து ஓரிடத்தில் நிலையாக வாழும் வாழ்வுக்குக் கால்கோள் நாட்டியது.

ஆற்றலை வணங்குவதே தமிழரின் வழிபாட்டு மரபாகும் என்ற நிலையில் வேளாண்மைக்கும் கால்நடைவளர்ப்புக்கும் முக்கியத்துவம் கொடுத்தனர். அதனைத் தொடர்ந்து பல வழிபாடுகளும் நம்பிக்கைகளும் தோன்றின. ஓரிடத்தில் நிலையாகத் தங்கும் போது தூய்மைக் கருத்தும் - கழிவு மேலாண்மையும் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாக மாறியது. இத்தகைய தூய்மைக் கோட்பாடு பிற்காலத்தில் சில நம்பிக்கைகளும் பழக்க வழக்கங்களும் தோன்றக் காரணமாய் அமைந்தது.

ஓரிடத்தில் நிலத்தைப் பண்படுத்தி உழுது வேளாண்மை செய்தபோது பயிர்கள் நன்கு விளைந்த நிலையில் அதே இடத்தில் தொடர்ந்து நிலைபெற்று வேளாண்மை செய்தனர். இம்மக்கள் இயற்கையை நம்பி வாழ்ந்தவராவர். அவர்கள் தாம் இயற்கையைப் போல நடந்தால் தாம் செய்வதைப் பார்த்து இயற்கையும் அதுபோல் நடக்கும் என்று நம்பினர். “மனித இனம் குழவிப்பருவத்தில் இருந்த நிலையில் இயற்கையை மந்திரத்தாலும் மாயவித்தைகளாலும் பணிய வைக்க முடியும் என்று நம்பிற்று. இயற்கையைப் போலச் செய்தால் இயற்கை தனக்கு பணிந்து தன் சொற்படி ஏவல் கேட்கும் என்று எண்ணிற்று”.( தே. லூர்து, நாட்டார் வழக்காற்றியல் ஆய்வுகள், ப.177) இது வளமை அல்லது செழிப்பு பற்றிய நம்பிக்கைகளை ஏற்படுத்துகின்றது. இந்நம்பிக்கை காரணமாக வளமைச் சடங்குகள் செய்யப் படுகின்றன. தொடர்ந்து வளமை வழிபாடு தோன்றியது. வளமை என்பது பயிர் வளமும் உயிர் வளமும் மிகுதியாகச் செழித்து வளர்வது காரணமாக உருவான கருத்தாக்கம் ஆகும். இதனடிப்படையில் வளமைக் குறியீடுகள் பல உருவாகியிருக்கின்றன.

### தாய்த்தெய்வ உருவாக்கத்தில் வளமைப்பார்வை

“உலக இலக்கியங்களும் நாட்டார் வழக்காறுகளும் நிலத்தையும் பெண்ணையும் ஒரே நேர்க்கோட்டில் வைத்தே பேசுகின்றன. நிலத்திற்குரிய இலக்கணங்களைப் பெண்ணிற்கும் பெண்ணிற்குரிய இலக்கணங்களை நிலத்திற்குமாகப் பொருத்திப் பார்ப்பதை சமூகம் ஒரு மரபாகவே இன்று வரை கடைபிடித்து வருகின்றது.”[2] (ஆர். முத்துராஜன், நாட்டார் வழக்காற்றில் வேளாண் பழமொழிகள், ப. 82) மண்ணும் பெண்ணும் ஆகிய கருத்துக்கள் வளமைக்குரிய ஒன்றாகவும் வளமையுடனும் கட்டமைக்கப்பட்டிருக்கின்றன. உலகியலில் மண், பயிர்களை உற்பத்தி செய்கின்றது. பெண் மனித உயிர்களை உற்பத்தி செய்கின்றாள். இவ்விரண்டையும் உற்பத்தி என்ற அடிப்படையிலும் ‘வளமை’ என்ற அடிப்படையிலும் ஒப்புமைப்படுத்திப் பேசியிருக்கின்றனர். இதனடிப்படையில் மக்கள் தாய்தெய்வ வழிபாட்டினை மேற்கொண்டிருக்க வேண்டும். இதுவரை கிடைத்துள்ள தாய்தெய்வச் சிற்பங்கள் அனைத்தும் வளமைக்குறிகளுடன் கிடைத்துள்ளமை இக்கருத்தினை மெய்ப்பிக்கின்றது. தொல்லியல் சான்றுகளில் காணலாகும் பருத்த வயிறும் மார்பகங்களும் தவ்வை சிற்பத்திலும் இடம்பெறுகின்றன. தவ்வை சிற்பத்தினைத் தவிர வேறு எந்தப் பெண்தெய்வச் சிற்பங்களும் பெரிய வயிற்றினையும் மார்பினையும் கொண்டிருக்கவில்லை. இக்கருத்துக்கள் வளமைக்கும் வளத்தின் விளைவான செல்வத்திற்கும் ஒரு பெண்தெய்வமே அதிபதியாகக் கருதப்பட்டு வணங்கப்பட்டு வந்தமையை வெளிப்படுத்துகின்றன.

### நாட்டுப்புற மக்களின் வளமைக்கருத்துக்கள்

மூத்ததேவி நாட்டுப்புற மக்களின் சிறுதெய்வமாகும். இதனைப்பற்றி தொ.பரமசிவன் அவர்கள் “குடைவரை கோவில்கள் எழுந்த காலத்தில் வைதீகப் பார்ப்பன மரபு ஏற்றுக்கொள்ளாத தொல்திராவிடத் தெய்வங்கள் சிலவும் இக்கோவில்களில் இடம் பெற்றிருந்தன. திருப்பரங்குன்றத்தில் சிவன், திருமால், முருகன், நடராசர் ஆகிய தெய்வங்களோடும் பக்கத்தில் மூத்ததேவி(மூதேவி) எனப்பட்ட ஜேக்ஷ்டா தேவிக்கும் ஒரு தன்னி குடைவரை உருவாக்கப்பட்டுள்ளது”. (தொ. பரமசிவன், சமயங்களின் அரசியல்,பக்.20,21) இக்கருத்துக்கு சில வரலாற்று ஆவணங்களும் துணைசெய்கின்றன. வைதீக மதமும் திருமாலை வழிபடும் பிராமண அந்தணர்களின் தீட்டுக்கோட்பாடுமே தமிழர்களின் நாட்டுப்புறத்தெய்வங்கள் ‘சிறு’தெய்வங்களாக மாறியதற்குக் காரணமாகும்.

மூத்ததேவி செல்வத்துக்கு அதிபதியாக இருந்தவள் என்பதைக் கூற நாட்டுப்புறப் பழக்கவழக்கங்களில் ஏராளமான சான்றுகள் காணக்கிடைக்கின்றன. உதாரணமாக வீட்டினைத் தூய்மை செய்யும் துடைப்பத்தை காலில் மிதிப்பதும், வீட்டின் மூலையில் குப்பைகளைக் குவித்து வைப்பதும், பொழுது இறங்கும் வேளை அதாவது மாலை வேளைகளில் குப்பையை வெளியே கொட்டுவதும், உறைமோர் முதலான பெருகக் கூடிய செல்வங்களை மாலை நேரத்தில் மற்றவருக்குத் தருவதும், நாம் பயன் படுத்திய துடைப்பத்தினைக் கடனாகத் தருதல், வெள்ளிக் கிழமைகளில் பணம் கொடுத்தல், உரல் அம்மி முதலான உணவு தாணியங்களினைத் தூய்மை செய்யும் கருவிகளைக் காலில் மிதித்தல் போன்ற செயல்களால் ஒரு குடும்பத்திற்கு வறுமை, தரித்திரம், செல்வக் குறைவு, உணவுக்குறைவு ஆகியவற்றை ஏற்படுத்தும் என்பது நாட்டுப்புற நம்பிக்கையாகும். இந்நம்பிக்கைகளுக்குரிய பொருள்களைப் பார்க்கும் போது இவை தவ்வையின் அடையாளங்களாகத் தெரிகின்றன. ஆனால் நாட்டுப்புற வழக்கு இவற்றுக்குரிய தெய்வமாக திருமகளான லட்சுமியை அடையாளப்படுத்துகின்றது. இவற்றிடையே நுட்பமாக பார்க்கும்போது மக்கள் தவ்வைக்கு மாற்றாக இலட்சுமி தெய்வத்தை ஏற்றுக்கொள்ளப்பட்டமை புலனாகின்றது.

பிற்காலத்தில் தமிழகத்துக்குள் வந்த ஆரியர்களின் பண்பாட்டுக் கலப்பே

தமிழர்களின் வளமைத் தெய்வம் மறைந்ததற்கான காரணமாக அமைகின்றது. அவர்கள் பழங்குடி இன மக்களின் தெய்வங்கள் சிலவற்றைத் தமதாக்கிக் கொண்டனர் என்பதும், அத்தெய்வங்களின் வழிபாட்டு முறையைத் தங்களது மரபுக்கேற்ப மாற்றிக் கொண்டனர். மேலும் அத்தெய்வங்களுக்கான புராணக் கதைகளையும் புனைந்து கொண்டனர். இவ்வாறே தவ்வை என்ற வளமைத்தெய்வத்திற்கு ஈடாக இலட்சுமி என்ற தெய்வத்தைப் படைத்துக்கொண்டிருப்பினும் இதனை நாட்டுப்புற மக்களும் பெயரளவில் ஏற்றுக்கொண்டாலும் மறைமுகமாக அவர்களது வாழ்வியலில் தவ்வையையே நிலைபெற்ற தெய்வமாக வைத்துள்ளனர்.

**உரம்**

தொடக்க காலத்தில் மக்களின் வழிபாடு ஆற்றலை வழிபடுவதாக அமைந்திருந்தது. இயற்கையைக் கண்டு அஞ்சிய மனிதன் உணவும், வளங்களும் தனது தேவைகளும் இயற்கையிடமே இருக்கின்றது என்பதையும் அறிந்தான். எனவே அவ்வியற்கையை வயப்படுத்தவும் முயற்சிகள் மேற்கொண்டான். ஆற்றலைப் பெறவும் அதனைத் தன்வயப்படுத்திக்கொள்ளவும் விழைந்த மனிதன் அதனை வணங்கத் தலைப்பட்டான். இவ்வகையில் முதன்மைத்தொழிலான வேளாண்மைக்கு மூலமாக வளத்தினை வழங்குவது உரமாகும். உரத்தின் ஆற்றலே இங்கு வளம் என வழங்கப்படுவதாகும்.

ஓரிடத்தில் நிலத்தைப் பண்படுத்தி உழுது வேளாண்மை செய்தபோது பயிர்கள் நன்கு விளைந்த நிலையில் அதே இடத்தில் தொடர்ந்து வேளாண்மை செய்தனர். அவ்வாறு செய்யும்போது ஆண்டுக்கு ஆண்டு மண்ணின் வளம் குறைவது இயற்கையே. அப்போது உரத்தின் பயன்படு மேலோங்கிய சூழல் காணப்படும். வேளாண்மையில் உரத்தின் பயன்பாடு வளத்தை மிகுவிக்கிறது. இவ்வளமை ஆற்றல் வணக்கத்திற்குரிய தெய்வத்தினைத் தோற்றுவிக்கிறது. எருவினைக் குப்பை என்றே வழங்குவர். எருவினைக் குழிகளில் இட்டு மட்க வைத்து உரமாகப் பயன்படுத்துவர். வீடுகளில் சேரும் குப்பையும் எருக்குழிக்கே சென்றுசேரும். எருவினை வளம் தரும் செல்வத்தின் மூலமாகக் கருதியதாலே குப்பையைக் கொட்டுதல் - செல்வத்தைக் கொட்டுதல் என ஆகிவிட்டது. உரக்குழியை மிதிக்கக்கூடாது என்ற நம்பிக்கையும், சாணம் என்பது இலட்சுமியின் அம்சம் எனக் கூறும் வழக்கு தவ்வையைக் குறித்து வருவதனையும் இதன் மூலம் அறியலாம்.

**தவ்வை குறித்துவரு கிளவிகள்**

சேட்டை என்ற சொல்லாட்சி கி.பி. எட்டாம் நூற்றாண்டில் தொண்டரடிப்பொடி ஆழ்வார் “சேட்டைதன் மடியகத்துச் செல்வம் பார்த்திருக்கின்றீரே” என்று பாடுவதன் மூலம் அறிகிறோம். ஜேஷ்டா என்பதற்கு மூத்த அல்லது பெரிய என்று பொருளாகும். திருமகளாகிய லட்சுமி தேவிக்கு மூத்தவள் என்ற பொருளிலில் பரவலாக ஜேஷ்டாதேவி என்ற பெயர் பயன்படுத்தப் படுகின்றது. ஆனால் தமிழில் மூத்தோள், பழையோள் என்ற தாய்தெய்வப் பெயர்களே வடமொழியில் ஜேஷ்டாதேவி என்று ஆக்கிக்கொள்ளப்பட்டது. ஆரியர்கள் தமிழர்களின் அல்லது பழங்குடிமக்களின் தெய்வவழிபாட்டை ஏற்றுக்கொண்டனர். அவ்வகையில் ஆரியர்களின் பெண்தெய்வ வழிபாடு என்பதும் பழங்குடி மக்களிடம் இருந்து பெறப்பட்டதாகும். சூடாமணிநிகண்டு ஜேஷ்டாதேவிக்கு வேறுபெயர்களாக பதிமூன்று(13) பெயர்களைக் குறிப்பிடுகின்றது. மூதேவி, தௌவை, முகடி, சீர்கேடி, சிறப்பில்லாதாள், கேட்டை, கெடலணங்கு, சேட்டை, ஏகவேணி, கலதி, இந்திரைக்கு மூத்தாள், காகத்துவசம் உற்றாள், கழுதை வாகினி - இவற்றுடன் கயாதர நிகண்டு பதிநான்காவதாக(14) கரக்கொடி மங்கை என்ற பெயரையும் சேர்த்துக் குறிப்பிடுகின்றது.

**தவ்வை**

மூத்ததேவியைக் குறிக்கத் தற்கால ஆய்வுகளில் தவ்வை என்ற சொல்லே அதிகம் காணப்படுகின்றது. “பட்டோன் தவ்வை படுதுயர் கண்டு” (சிலம்பு.15:60) என்ற சிலப்பதிகார வரியில் காணப்படும் பட்டோன் தவ்வை என்ற சொல்லுக்குப் “பொய்யனைப் பெற்ற தாய்”4 என உரையாசிரியர்களால் பொருள் கூறப்பட்டுள்ளது. இதே சிலப்பதிகாரத்தில் “ஐயையும் தவ்வையும்”(சிலம்பு.16:52) என்ற வரி காணப்படுகின்றது. இது மாதரியையும் ஐயையும் குறித்துவரும் வரியாகும். இதிலும் தவ்வை எனும் சொல் ஐயையின் அன்னை மாதரியைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளது. சிலப்பதிகாரத்தின் சமகாலத்தில் இயற்றப்பட்டதாகக் கருதப்படும் மணிமேகலையில் “தாரை தவ்வை தன்னொடு கூடிய”(மணி.7:104) என்னும் வரி காணப்படுகின்றது. இவ்வரியில் தவ்வை என்ற சொல்லுக்கு மூத்த சகோதரி என்று பொருள் கொள்ளப்பட்டுள்ளது. சமகாலத்தில் வாழ்ந்த நெருங்கிய தொடர்புடைய இரு புலவர்களின் இப்பொருள் வேறுபாட்டிற்குக் காரணம் அவர்களின் வாழ்விடத்தின் வட்டார வழக்கு வேறுபாடாக இருக்கலாம். தவ்வை எனும் சொல் அன்னையைக் குறிக்கப்படுவதாகக் கொண்டாலும் தாய்வழிச் சமூகம் நிலவிய தமிழகத்தில் மூத்ததாய் இறந்தபிறகு மூத்த சகோதரி குடும்பத் தலைவியாவாள். எவ்வாறாயினும் குடும்பத் தலைவியைத் தவ்வை என அழைத்ததும், அவ்வழக்கு பின்னாளில் அன்னை, மூத்த சகோதரி ஆகிய இருவரையும் குறிக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

இவற்றிலிருந்து மாறுபட்டு சங்க காலத்தைச்சேர்ந்த காப்பியங்களுக்கு முற்பட்டதாகக் கருதப்படும் நூலான திருக்குறளில் தவ்வை என்ற சொல் நேரடியாக ‘மூதேவி’ என்ற பொருளிலேயே ஆளப்பட்டுள்ளது என்பது கிட்டத்தட்ட அனைத்து உரையாசிரியர்களின் கருத்தாகவே உள்ளது.

**அவ்வித்து அழுக்காறு உடையானைச் செய்யவள்**
**தவ்வையைக் காட்டி விடும்.** (குறள்.167)

என்ற குறளுக்கு “பிறர் ஆக்கங்கண்டவழிப் பொறாமையுடையானைத் திருமகள் தானும் பெறாது தன் தவ்வைக்குக் காட்டிநீங்கும்” எனப் பரிமேலழகர் உரை கூறுகிறார்.

“அழுக்காறு உடையானைத் திருமகள் தானும் அழுக்காறு செய்து தன் தவ்வையாகிய மூதேவிக்கு காட்டி இவன்பால் செல் என்று போம். இது நல்குரவிற்குக் காரணம் கூறிற்று” என மணக்குடவரின் உரை கூறுகின்றது. செய் என்பதற்கு நிலம் என்று பொருள். இச்சொல்லுடன் ‘அள்’ என்ற பெண்பால் விகுதி சேர்க்கப்பட்ட செய்யவள் என்ற சொல்லுக்கு நிலமகள், பூமித்தாய் என்றும் பொருள் கொள்ளலாம். நிலத்தைப் பெண்ணாக உருவகம் செய்யும் வழக்கம் தமிழர்களிடையே பரவலாகக் காணப்படுகின்றது. இதனடிப்படையில் ‘செய்யவள் தவ்வை’ என்ற வாக்கியத்திற்கு செய்யவளான தவ்வை எனவும் பொருள் கொள்ளலாம். இதனைக்கொண்டு பேராசை எனும் காழ்புணர்ச்சியை ஒருவன் கைக்கொண்டால் அவன் நிலமகளுக்கு உரமாவான். அல்லது மண்னோடு மண்ணாவான் என இக்குறளிற்குப் பொருள் கொள்ளவும் இடமுண்டு.

பொறாமைக் குணம் கொண்டவன் மடிந்து மண்ணிற்கு உரமாவான் என்ற பொருளில் இக்குறளைக் காணலாம். இக்கருத்திற்கு வலுவூட்டும் வகையில் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி ‘தவ்வுதல்’ என்ற சொல்லுக்குக் கெடுதல், அழிதல், உருக்குலைதல் ஆகிய பொருள்களைத் தருகிறது. உயிர் மற்றும் உயிரல் பொருள்கள் உருக்குலைந்து, அழிந்து உரமாகின்றன. இவ்வுரமே தவ்வையின் முதன்மையான அடையாளமாகும். மேலும் இவ்வகராதி தவ்வை என்ற சொல்லுக்கு தாய், தமக்கை, மூதேவி ஆகிய பொருள்களைக் கூறுகின்றது. மேலும் அவ்வை என்ற சொல்லிலிருந்து தவ்வை என்ற சொல் வந்ததாகக் குறிப்பிடுகின்றது. தவ்வை என்ற சொல்லுக்கு ந.சி.கந்தையாவின் திருக்குறள் அகராதி “தமக்கை, மூதேவி” ஆகிய பொருள்களையும்

செந்தமிழ் அகராதி “தமக்கை, தாய், மூதேவி” ஆகிய பொருள்களையும் கூறுகின்றது. மதுரைத்தமிழ்ப் பேரகராதி தவ்வை எனும் சொல்லுக்கு “அக்காள், செவிலித்தாய், மூதேவி, செவிலியின் மகளாய்த் தலைவியின் மூத்தவள்” ஆகிய பொருள்களைக் கூறுகிறது.

தவ்வுதல் என்ற சொல்லுக்கு சொற்பிறப்பியல் அகராதி கூறும் பொருள்களின் வழி, அதனுடன் ‘ஐ’ எனும் பெண்பால் விகுதிசேர்க்கப்பட்டு தவ்வை என்ற சொல் தோன்றியிருக்கலாம். இச்சொல் வளத்துடனும் உரத்துடனும் தொடர்புடைய பெண்தெய்வத்தைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டிருக்கலாம் என்ற விளக்கம் இதிலிருந்து பெறப்படுகின்றது.

**மாமுகடி**

மாமுகடி என்ற சொல்லும் பலவிடங்களில் தவ்வையைக் குறிக்கப் பயன்படுத்தப்படுகின்றது. திருக்குறளிலும் மூத்ததேவியைக் குறிக்கும் சொல்லாக மாமுகடி என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது.

**மடியுளான் மாமுகடி என்ப மடியிலான்**

**தாளுளாள் தாமரையி னாள்.** (குறள்.617)

இக்குறளில் காணும் மாமுகடி என்னும் சொல் மூதேவியைக் குறிப்பதாக உரையாசிரியர்கள் பலரும் பொருள் கூறியுள்ளார். உதாரணமாக மணக்குடவர் எனும் உரையாசிரியர் ‘வினைசெய்யுங்கால் அதனைச் செய்யாது சோம்பியிருப்பானது சோம்பலின் கண்ணே மூதேவி உறைவாள். அதனைச் சோம்பலின்றி முயலுபவன் முயற்சியின் கண்ணே திருமகள் உறைவள் என்று சொல்லுவர். இது வினையை மடியின்றிச் செய்யவேண்டும் என்பது கூறிற்று’ என உரை கூறியுள்ளார். ‘கரிய சேட்டை ஒருவன் மடியின் கண்ணே உறையும்; திருமகள் மடியிலானது முயற்சிக்கண்ணே உறையும் எனச் சொல்லுவர் அறிந்தோர்’ எனப் பரிமேலழகர் உரை கூறியவிடத்து கரிய சேட்டை என மூதேவியைக் குறிப்பிடுகின்றார். திருக்குறளார் வீ.முனிசாமியும் தவ்வையைக் குறிக்கக் கரியசேட்டை என்ற சொல்லட்சியைப் பயன்படுத்தியுள்ளர். பெரிய துன்பக் கடவுள் என சி. இலக்குவனார் தவ்வையைக் குறிப்பிடுகின்றார். கரிய நிறமுடைய மூத்தவள் என கா.சு.பிள்ளை குறிப்பிடுகின்றார். இவ்வாறு மூதேவியைக் குறிக்க சேட்டை, கரிய சேட்டை, துன்பக்கடவுள் என்ற சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. மேற்கண்ட உரைகள் அனைத்தும் ‘மாமுகடி’ என்ற சொல்லிற்கு கரிய சேட்டை ஆகிய மூதேவி என்றும் தாமரையினாள் என்பதற்குத் திருமகள் என்றும் பொருள் கூறுகின்றன.

முகடி என்ற சொல் மோடி என்ற சொல்லிலிருந்து திரிந்த சொல்லாகக் கருதலாம். சங்க இலக்கியப் பாக்களில் ‘மோடி’ என்ற சொல் காணப்படுகின்றது. இச்சொல் தாய்த்தெய்வத்தைக் குறித்து வருகின்றது. முகடி என்ற சொல்லுக்கு அபிதான சிந்தாமணி ‘மூதேவிக்கு ஒரு பெயர்’ எனப் பொருள் கூறுகின்றது. மதுரைத் தமிழ்ப் பேரகராதி முகடி என்ற சொல்லுக்கு மூதேவி என்பதுடன் ‘மேட்டிமைக்காரி’ எனப் பொருள் கூறுகின்றது. மேட்டிமை என்ற சொல் தற்காலத்தில் உயர்ந்த என்ற பொருளில் ஆளப்படுகின்றது. மேட்டிமைக்காரி என்ற சொல்லுக்கு மேட்டிமைப்பண்பு உடையவள் என்ற பொருள் ஏற்படுகின்றது. மேட்டிமை என்ற சொல்லுக்கு தலைக்கணம், கர்வம் போன்ற பொருள்களுடன் ‘பெரியதனம்’ என்ற சொல்லும் காணப்படுகின்றது. இதன் மூலம் பெரியதனக்காரி என்பதும் பெறப்படுகின்றது. இச்சொல்லை மூத்ததேவி, தவ்வை பற்றி எழுதிய தொல்லிய ஆய்வாளர் கோ. சசிகலா குறிப்பிடுகின்றார். “மூத்ததேவியின் பெருத்த வயிறும் தனங்களும் மிகுந்த வளத்தைத் தரும் குறியீடுகளாகப் பண்டு வணங்கப்பட்டன” (கோ. சசிகலா, கொற்றவையும் நடுகற்களும், ப.81) என அவர் குறிப்பிடுவதிலிருந்து பெரியதனம் என்பது வளமை வழிபாட்டுப் பொருளாக இருந்ததனை அறியலாம். மேலும் மேட்டிமைக்காரி என்பதும் மேட்டிமைக்காரன்

என்பதும் ஒருபொருள் உணர்த்தும் பால் வேறுபாட்டுச் சொற்கள் ஆகும்.

பெரியதனக்காரன் என்பதற்கு நிழக்கிழார், பெரும் செல்வமுடையவன், சொத்துடையவன் என்ற நேரடிப்பொருள் கூறப்படுகின்றது. நிலம், செல்வம் ஆகிய பொருள்கள் பண்டைய இனக்குழு சமூகத்தில் பெண்ணோடு தொடர்புடையவனவாய் இருந்தன என்பதை அறிவோம். இக்காலத்தில் பெரியதனக்காரன் என்ற சொல் ‘ஒருவருடைய முடிவெடுக்கும் பண்பை’ எதிர்ப்பதற்காகப் பயன்படுத்தப்படுகின்றது. இதன் மூலம் பெரியதனக்காரர் ஊரின் நிர்வாகத்தில் சில முடிவுகளை எடுப்பவராக உள்ளதை நம்மால் அறியமுடிகின்றது. பெரும் சொத்து, பெரும் செல்வம் ஆகியவற்றின் அதிபதியாக இருந்தமையால் தவ்வை மேட்டிமைக்காரி என அழைக்கப்படுகிறார்.

சங்க இலக்கியத்தில் காணப்படும் மோடி என்ற சொல்லானது தாய்த்தெய்வத்தைக் குறித்து வருகின்றது. இதன் வேர்ச்சொல் ‘மோடு’ எனக் கொண்டால், இதற்கு “மேடு, உயர்ச்சி, முகடு, கூரையின் உச்சி, பருமை, பெருமை, உயர்நிலை, வயிறு, கருப்பை, பிளப்பு, உடம்பு, மடமை ஆகிய பொருள்களை தமிழ் தமிழ் அகராதி கூறுகின்றது. இச்சொற்களுள் முகடு என்ற சொல்லிற்கு பெண்பால் விகுதி சேர்த்தால் முகடி ஆகின்றது. மேலும் பருமை, வயிறு, கருப்பை, பிளப்பு, உடம்பு ஆகிய சொற்களும் வளமைக் கருத்தோடு பொருந்தி அமைகின்றன. உயிர்களைத் தோற்றுவிக்கும் கருப்பையும் கருவினைத் தாங்கும் வயிற்றையும் அவ்வயிறு மேடாக இருப்பதனையும் உணர்த்தும் இச்சொல் சங்க இலக்கியத்தில் தாய்த்தெய்வத்தைக் குறிக்கின்றது.

மோடி என்பதற்கு எல்லோரையும் பெற்ற தாய் எனப் பொருள் கூறுவார் நச்சினார்க்கினியர். மோடு என்பதற்கு வயிறு, பெரிய வயிறு, எல்லோரையும் பெற்ற வயிறு எனப் பொருள் கூறுவர். மோடி என்பதற்கு அத்தகைய வயிற்றை உடைய பெண், தாய், எனப் பொருள் கொள்ளலாம். “மோடு என்பதற்கு எல்லோரையும் பெற்ற வயிறு என்று பெரும்பாணாற்றுப்படையில் (வரி 458) நச்சினார்க்கினியர் கூறிய விளக்கத்தைக் கவனிக்க வேண்டும்”8

பெருங்கதையில் இலாவணகாண்டம் 106 வது பாடலில் மோடேந்தரிவை என்ற சொல் காணப்படுகின்றது. தனிப்பாடல் ஒன்று ‘பெருமோட்டுக்கிழாள்’ என்ற சொல்லைப் பயன்படுத்துகின்றது. தகடூர் யாத்திரை பெருமோட்டாள் எனக் குறிப்பிடுகின்றது. பிற்காலத்தில் மோடி என்பது காளி, மந்திரம், தந்திரம் என்ற பொருளில் ஆளப்படுகின்றது. கான மோடி என நீலகேசியிலும் போகமர் மோடி, கடற்கோடியின் மோடி என்ற சொற்கள் தேவாரத்திலும் காணப்படுகின்றது. தக்கையாகப் பரணி மோடியுரையுங்காடு என்று குறிப்பிடுகின்றது. ‘மோடி முன்தலையை வைப்பரே முடி’ என்ற வரிகள் கலிங்கத்துப்பரணி பெண்தெய்வத்திற்குத் தலையைக் காணிக்கையாக்குகின்றதைத் தெரிவிக்கின்றது.

எல்லாரையும் பெற்ற வயிறு பெரியதாக இருக்க வேண்டும் என்பதற்காகப் பெரிய வயிற்றையுடைய தாய்த்தெய்வம் படைக்கப்பட்டது. புதிய கற்கால மனிதன் இத்தெய்வத்தைச் சுடுமண் சிற்பங்களாக உருவாக்கினான். இவற்றின் எச்சங்கள் பல தொல்லியல் சான்றுகள் வழி காணக்கிடைக்கின்றன. இவற்றுள் தாய்மைக்கான அடையாளங்கள் மிகுத்துக் கூறப்பட்டுள்ளன.

### பழையோள்

தவ்வை என்ற தெய்வத்தின் சங்ககாலப் பெயர் பழையோளாக இருக்கலாம் என ஆய்வாளர்கள் கருதுகின்றனர். “இழைஅணி சிறப்பின் பழையோள் குழவி”(முருகு.259) என்பதற்கு காடுகாளுடைய குழவி எனப் பொருள் கூறுவர். காடுகாள் என்பது காடுகிழாள் என்பதிலிருந்து தோன்றிய சொல்லாகும். பழையர் என்ற பழங்குடி சமூகத்தின் தெய்வம் பழையோள் என்பதும் பலருடைய கருத்தாக உள்ளது. பழையர் மகளிர் தழையுடை அணிந்து கோடேந்து அல்குல் உடையவராக தாய்த்தெய்வத்தை

வணங்கினர் என்பதை

**“தலையணிப் பொழிந்த கோடேந் தல்குல்**

**பழையர் மகளில் பனித்துறை பரவ”** (அகம்.201:4-7)

என்ற அகநானூற்றுப் பாடல் உணர்த்துகின்றது. “நக்னசபரி என்ற பெயரில் இந்தத் தெய்வத்தை இந்துக்களும் தொழுதனர். ஆடையற்ற பெண்தெய்வம் என்பதே இதன் பொருள்” (பி.எல். சாமி,தமிழ் இலக்கியத்தில் தாய்தெய்வ வழிபாடு,பக்.1,2) எனப் பி.எல்.சாமி குறிக்கின்றார். இன்றளவும் கிடைத்துவரும் தவ்வை சிற்பங்களும் மேலாடையற்றதாகவே காணப்படுகின்றது. மிகப் பழமையான குடிகளிடமிருந்து மிகப்பழங்காலத்தில் தமிழர் பெற்ற தெய்வம் என பழையோளை பி.எல்.சாமி குறிக்கின்றார். முதியோள் கோட்டம் என்ற கோவில் பற்றி மணிமேகலையில் கூறப்பட்டுள்ளது. இது பழையோளை வழிபடும் இடமாக இருக்க வாய்ப்புகள் இருக்கின்றது. நாயன்மார்களும் முதுகோதை என்ற சொல்லாட்சியைப் பயன்படுத்துகின்றனர். இச்சொல்லும் தவ்வையைக் குறித்து வரலாம்.

திவாகர நிகண்டில் தாய்த்தெய்வங்களாகக் கூறப்படும் பெயர்த் தொகுதிகளில் காடுகாள் என்பதற்கு மோடி, காரிதாய், கொற்றி, மாரி, சூரி, வடுகி, மூதணங்கு என்ற சொற்களைக் காணலாம். இவற்றுள் மோடி என்பதற்கு எல்லோரையும் பெற்ற வயிறு எனப் பொருளாகும். மூதணங்கு என்ற சொல்லும் தவ்வையைக் குறித்து வரும். மூதணங்கு என்ற சொல்லுக்கு பழையோள், வருத்தும் தெய்வம், பெண்தெய்வங்களில் மூத்தவள் எனப் பொருள் கூறப்படுகின்றது.

**ஏகவேணி**

தவ்வையின் பல பெயர்களுள் ஒன்றாக ‘ஏகவேணி’ என்ற பெயரும் காணப்படுகிறது. இதற்குப் பொதுவான பொருளாக ஒற்றைச் சடையுடையவள் எனக் கூறப்படுகின்றது. ‘ஏ’ எனும் சொல்லுக்கு அம்பு என்பது பொருளாகும். ஒரு நாணில் ஒரே அம்பு மட்டுமே ஏற்ற முடியும் என்பதன் அடிப்படையில் ஒற்றை என்ற பண்புப்பெயர் ஏ எனும் ஓரெழுத்து ஒருமொழிக்கு ஆகி வந்தது. வில்வித்தையில் தேர்ந்தவன் ஏகலைவன் என அழைக்கப்பட்டான். முழுமுதற்கடவுளாகிய சிவபெருமானை ஏகன் என்றும் கூறுவர்.

வேணி என்பதற்கு சடைப்பின்னல் என இவ்விடம் பொருள் கொள்ளப்படுகின்றது. இதனடிப்படையில் ஏககவேணி என்ற சொல்லுக்கு ஒற்றைச் சடையுடையாள், ஒற்றைச் சடையுடைய மூதேவி என்றெல்லாம் பொருள் ஏற்பட்டது. ஏகம், வேணி, ஏகவேணி ஆகியசொற்களுக்கு அகராதிகளிலும் பொருள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் சில வளமைக் கருத்தோடு பொருந்திவருகின்றன. வேறொரு வகையில் ‘ஏகவேணி’ என்ற பெண்தெய்வம் வண்ணார்கள் வழிபடும் தெய்வமாக இருந்தமைக்குக் கல்வெட்டுச் சான்றுகள் பல காணக்கிடைப்பதாக கல்வெட்டு அறிஞர்கள் தெரிவிக்கின்றன. அவ்வகையில் தவ்வையோடு தொடர்புடைய கழுதையும் வண்ணார் இன மக்களின் வாழ்வாதாரமாகத் திகழ்ந்துள்ளது. வண்ணார்கள் அழுக்குத் துணி மூட்டையுடன் எதிரே வந்தால் நல்ல சகுனமாகப் பார்க்கப்படுகின்றது. அவர்கள் அழுக்குத்துணி மூட்டையைக் கழுதையின் மீதே வைத்து நடத்தி வருவர். அக்கழுதையைக் குறித்து இந்நம்பிக்கை தோன்றியிருக்கலாம் எனக் கருத இடமுண்டு.

வேணி என்ற சொல்லுக்கு ‘பின்னிய சடை, வசம்பு, நீர்ப்பெருக்கு, தெரு, ஆகாயம்’ என்று ந.சி.கந்தையாவின் செந்தமிழ் அகராதி குறிப்பிடுகின்றது. நீர்ப்பெருக்கு என்பதும் ஆகாயம் என்பதும் தவ்வையோடு நேரடிப்பொருள் கொண்டதாக வளமைக்கருத்தோடு தொடர்புடையதாக உள்ளது. நீர் என்பது அனைத்திற்கும் ஆதாரம் ஆகும். பயிர் வளர்ச்சிக்கு அடிப்படை நீராகும். நீருக்கு ஆதாரமாக ஆகாயம் அமைகின்றது. நீரும் நீரால் நீக்கப்படும் அழுக்கும் வண்ணார்களின் தொழிலுக்கு அடிப்படையாகும். அழுக்கின் அடையாளமாகவே தவ்வை வணங்கப்படுகின்றார். பயிர்வளர்ச்சிக்கும் நீரும்

உரமும் இன்றியமையாதன. துணிகளை வெளுப்பதற்கு நீரின் பங்கு இன்றியமையாதது. நீரும் உரமும் போல கழுதைவாகனம் என்பது தவ்வையோடும் வண்ணார்களின் வாழ்வாதாரத்தோடும் பிண்ணிப் பிணைந்துள்ளது. இன்றும் வீடுகளின் முன் கழுதையின் படத்தை மாட்டி 'என்னைப்பார் யோகம் வரும்' என்ற வாக்கியம் எழுதப்படுகின்றது. இங்கு யோகம் என்பது செல்வத்தைக் குறிப்பதாகவே அமைகின்றது. செல்வத்தின் அதிபதியான இத்தெய்வத்தை வணங்குதல் கூட இங்கு பேசப்படவில்லை. அதனைக் கண்டாலே போதும் என்ற கருத்து இவ்விடம் வலுவாகக் கூறப்பட்டுள்ளதனை அறியலாம். வளமை நம்பிக்கைகள் அனைத்தும் இத்தத்துவத்தினையே கொண்டு அமைகின்றன. இவற்றைச் சிறப்பச் சான்றின் மூலமும் அறியலாம். எனவே இவை பற்றிய நம்பிக்கையும் வளமையின் அடியாகவே பிறக்கின்றன.

## முடிவுரை

வளமை என்பது பயிர்கள் மற்றும் மனித உயிர்கள் பெருகி வளர வேண்டும் என்ற கருத்தினை மையமாகக் கொண்டு இயங்கும் ஓர் பண்பாட்டு அசைவாகும். பயிர் வளத்தைக் கொடுக்கும் ஆற்;றல் வடிவமான உரம் என்பது வணங்கப்பட்டு உயிர்களைப் படைக்கும் சக்தி படைத்த பெண்ணோடு உருவகப்படுத்தப்பட்டது. அப்பெண் தெய்வமாக வணங்கப்பட்டது. இதுவே தாய்த்தெய்வவழிபாட்டிற்கு அடிப்படைக் காரணமாக அமைகின்றது. நாட்டுப்புற மரபு என்பது பல்வேறு சமூக பண்பாட்டு மாற்றங்களைக் கடந்தும் தனக்கேயுரிய சில தனிப்பட்ட பண்பாட்டினை மாற்றத்துடனோ மாற்றமின்றியோ கடத்தி வருகின்றது. அவ்வகையில் இக்கட்டுரையின் மூலப்பொருண்மையான 'தவ்வை' பற்றிய கருத்துக்களையும் இம்மரபு கொண்டுள்ளதனை அறிய முடிகின்றது. தவ்வை குறித்த பெயராய்வில் இத்தெய்வம் குறித்த வளமைக்கருத்துக்கள் அடையாளப்படுத்தப்படுகின்றன. பழம் பெரும் நிகண்டுகளில் இத்தெய்வத்திற்குரிய பதினைந்துக்கும் மேற்பட்ட பெயர்கள் காணக்கிடைக்கின்றன. அவற்றுள் தவ்வை என்ற சொல் திருக்குறளில் ஆளப்பட்டு மட்குதல் உரமாதல் என்ற கருத்தாக்கத்தின் மூலம் இத்தெய்வத்தின் இருப்பை உணர்த்துகின்றது. 'மோடி' என்ற எண்ணத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு இத்தெய்வம் தாய்தெய்வங்களில் முதன்மையான மூத்த தெய்வம் என்ற கருத்தாக்கங்களை உணர்த்துகின்றது. 'மேட்டிமைக்காரி என்ற சொல்லாட்சி நிலத்தோடும் செல்வத்தோடும் தவ்வைக்குரிய உரிமையைக் காட்டுகின்றது. பழையோள் - முதியோள் - முதுகோதை ஆகிய சொற்பரிமாணங்கள் காலந்தோறும் ஏற்பட்ட இத்தெய்வத்தின் பெயர்மாற்றம் பற்றி அறிய உதவுகின்றது. ஏகவேணி என்ற பெயர் வளமையோடும் வண்ணார்களுடனான இத்தெய்வ உறவோடும் பொருந்திச் செல்கிறது. எனவே தமிழரின் ஆதித்தெய்வம், வளமைத்தெய்வம், மூத்ததெய்வம் ஆகிய பொருண்மைகள் தவ்வையோடு பொருந்தி வருகின்றன என்பதனை இக்கட்டுரை உறுதியாகச் சுட்டுகின்றது.

## துணைநின்ற நூல்கள்


1. சசிகலா. கோ, கொற்றவையும் நடுகற்களும்(பழந்தமிழர் வழிபாட்டு மரபுகள்), சித்தன் புக்ஸ், சென்னை–86( 2019).
2. சாமி. பி.எல்.,தமிழ் இலக்கியங்களில் தாய்தெய்வ வழிபாடு, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை-50(1975).
3. பரமசிவன். தொ, சமயங்களின் அரசியல், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை-5 (2022).
4. முத்துராஜன். ஆர்,நாட்டார் வழக்காற்றில் வேளண் பழமொழிகள், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை-50.(2022)
5. லூர்து. தே(ப.ஆ), நாட்டார் வழக்காற்றியல் ஆய்வுகள், முல்லை

நிலையம்,சென்னை-17.(2011)

© 2026 சுபத்ரா கு., முனைவர் சுந்தரமூர்த்தி ம.. This is an open-access article distributed under the terms of the CC BY 4.0 licence, which permits use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited. Published by / வெளியீடு: Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi..